சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 124/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 18 | நாள் | 18.07.2025 |
| பெயர் | சங்கீதா | தொழில் | WHC 460 |
| தந்தை பெயர் | தேவேந்திரன் | கிராமம் | வைத்தீஸ்வரன் கோயில் |
| தாலுக்கா | சீர்காழி | வயது | 38 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை மாவட்ட சைபர் கிரைம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக வேலை செய்து வருகிறேன். சம்பவத்தின்போது செம்பனார் கோவில் காவல் நிலையத்தில் காவலராக இருந்தேன். செம்பனார்கோவில் காவல் நிலைய குற்ற எண். 14/2018 ச/பி. 174 (3) குவிமுச வின் படி பதிவு செய்யப்பட்ட வழக்கில் இறந்துபோன சரண்யா, த/பெ. கண்ணன் என்பவரின் பிரேதத்தை சடலக்கூறாய்விற்கு 14.01.2018 அன்று காலை 10.00 மணியளவில் அடையாளம் காண்பித்து பிரேத பரிசோதனை உள்ள அலுவலாக என்னை காவல் ஆய்வாளர் நியமித்தார் அதன்படி அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் அலுவரிடம் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தேன். பிறகு காலை 10.15 மணியளவில் மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு வந்து இறந்துபோன சரண்யாவின் பிரேதத்தை பார்வையிட்டு பின்னர் பிரேத விசாரணைக்கு பின் சரண்யாவின் உடலை என்னிடம் ஒப்படைத்தார்கள். பிறகு மதியம் 12.15 மணியளவில்

WHC 460.

மருத்துவரிடம் பிரேத பரிசோதனைக்கான கடிதத்தை ஒப்படைத்து பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன். பிரேத பரிசோதனை முடித்து உடல் உள்ளுறுப்புகளையும் மற்றும் தோல் ஆகியவை சேகரம் செய்யப்பட்டதாக சொன்னார்கள். பின்னர் இறந்துபோன சரண்யாவின் உடலை அவரின் உறவினர் வசம் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். பின்னர் நீதிமன்ற உத்தரவு படி உள்ளுறுப்புகளை 22.02.2018 அன்று மயிலாடுதுறை அரசு மருத்துவர் கடிதத்துடன் தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். பின்னர் நிலையம் வந்து அறிக்கை செய்தேன். பின்பு 15.03.2018 அன்று சேகரம் செய்து வைக்கப்பட்ட தோலை மருத்துவரிடமிருந்து பெற்று தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி பேத்தாலஜி உதவி பேராசிரியரிடம் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை.

D... 7/12/01